# ஹிஜ்ராவின் சிந்தனை

K.M. முஹம்மது இஸ்மாயில் நூரி, நெல்லை.

ஹிஜ்ரா என்றால் இஸ்லாமிய ஆண்டின் தொடக்கமாகும். 1425ம் ஆண்டுகள் நிறைவு பெற்று 1426ம் ஆண்டு தொடங்கி விட்டது அல்ஹம்துலில்லாஹ். உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொரு சமுதாயத்த வருக்கும் புத்தாண்டுகள் வருகின்றன. மக்களும் புதிய ஆண்டினை மிக மகிழ்வோடு கொண்டாடுகின்றனர். புத்தாண்டை ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று மகிழ்வோடு வரவேற்கின்றனர். புத்தாண்டு அன்று புதிய ஆடைகளை அணிந்து பட்டாசுகளை வெடித்தும், உற்சாக பானங்களை குடித்துக் கொண்டும் மற்றும் கேளிக்கை, வீண் விளையாட்டுகளில் பங்கெடுத்து உற்சாகமாகவும் கொண்டாடி மகிழ்கிறார்கள். ஆனால் இவைகளுக்கு நேர்மாறாக ஹிஜ்ரா என்னும் இஸ்லாமிய புத்தாண்டு அமைந்துள்ளது.

ஹிஜ்ரா என்னும் நிகழ்வு ஏன் ஏற்பட்டது? ஏற்படக் காரணம் என்ன? என்று பார்க்கும் போது ஒரு உண்மையான வரலாற்றுச் சம்பவம் நினைவுக்கு வருகின்றது. உலகத்தூதர் நபி(ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்னால் அரபு நாட்டு மக்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. எங்கும் சிலை வணக்கம் நிறைந்து காணப்பட்டது. வலிமை வாய்ந்தவர்கள் இயலாதவர்களை அடக்கி வாழ்ந்து வந்தார்கள்! மனித நேயம் என்றால் என்ன? என்று கேட்கும் அளவிற்கு இரக்கமற்றவர்களாக வாழ்ந்து வந்தார்கள். இப்படிப்பட்ட மோசமான காலத்தில் தான் நபியவர்கள் தோன்றினார்கள். நபியவர்கள் மக்களின் நம்பிக்கைகுரியவர்களாக உண்மையானவர்களாக விளங்கினார்கள். அரபு உலகமே நபியவர்களை வாழ்த்தியது. அந்த அளவுக்கு நபியவர்கள் மக்களின் நன்மதிப்பை பெற்றவராக வாழ்ந்தார்கள். இத்தகைய சிறப்புக்குரியவர்களாக வாழ்ந்த போதுதான் நபியவர்கள் ஏகத்துவப் பிரச்சாரத்தை தொடங்கினார்கள். தூய மார்க்கம், இஸ்லாத்தை மக்களுக்கு போதிக்க ஆரம்பித்தார்கள். விளைவு மிக்க கடுமையாக எதிர்ப்பு ஏற்பட்டது. பாராட்டியவர்கள் ஏச ஆரம்பித்தார்கள். நபியை துன்புறுத்தினார்கள், ஊர் நீக்கம் செய்தார்கள். சத்தியத்தை எடுத்துக் கூறியதற்காக கல்லால் எறிந்து கொலை செய்ய முனைந்தார்கள். இத்தகைய வன் செயல்களுக்கு இடையே இஸ்லாம் வளர்ந்தது. எதிரிகளின் தாக்குதலுக்குப் பயந்து சத்தியப் போதனையை நபியவர்கள் கைவிட்டு விடவில்லை. பலத்த எதிர்ப்புகளுக்கு இடையிலும் இஸ்லாமிய பிரச்சாரத்தை செய்யாமல் இருந்ததில்லை. இதனால் இஸ்லாத்தை ஏற்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இதைக்கண்டு சகிக்காத எதிரிகள் நபியவர்களை கொலை செய்து விட வேண்டும் என சதியாலோசனை நடத்தினார்கள்.

இதை வல்ல அல்லாஹ் தன்னுடைய அருள் மறைக்குர்ஆனில் கூறுகிறான் :

> **“நிராகரிப்போர் நபியே! உம்மை சிறை பிடிக்கவோ! அல்லது உம்மை கொலை செய்யவோ! அல்லது உம்மை ஊரை விட்டு துரத்தவோ! உமக்கு விரோதமாக சூழ்ச்சி செய்து கொண்டிருந்ததை நினைத்துப் பார்ப்பீராக! அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர்;**

**அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான்; சூழ்ச்சி செய்வோரில் அல்லாஹ் மிக்க மேலாவன்".**

*அல்குர்ஆன் 8:30*

மிகப்பெரும் சூழ்ச்சிக்காரனாகிய வல்ல அல்லாஹ் தன்னுடைய அருமைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களை மக்காவைத் துறந்து யத்ரிப் என்னும் நகருக்குச் செல்லுமாறு உத்தரவிட்டான். நபி(ஸல்) அவர்கள் தன்னுடைய அன்பிற்கினிய நண்பர் அபூபக்கர் சித்தீக் அவர்களையும் அழைத்துக் கொண்டு யத்ரீப் என்னும் நகரத்திற்குச் சென்ற நிகழ்ச்சிதான் ஹிஜ்ரா என்னும் இஸ்லாமிய ஆண்டின் தொடக்கமாகும். நபியவர்கள் யத்ரிபுக்கு வந்த பிறகு தான் **'மதினா முனவ்வரா'** என்று பெயர் வந்தது. உலகத் தூதர் அவர்களின் நோக்கம் தூய மார்க்கமாம் இஸ்லாத்தை உலகெங்கும் பரவச் செய்ய வேண்டுமென்ற நன்நோக்கமாகும். நபியவர்கள் செய்த தியாகத்தில் நாமும் பங்கு பெறவேண்டும். ஒவ்வொரு ஹிஜ்ராவுக்குப் பின்பும் இஸ்லாம் புதுப்பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற தூய்மையான எண்ணம் நம் அனைவருக்கும் வர வேண்டும். இதுதான் ஹிஜ்ராவின் நோக்கம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஏனெனில் இஸ்லாம் ஏகனாம் அல்லாஹ்வின் மார்க்கமாகும். அதுவே இறுதியானதாகும்.

தூய இஸ்லாத்தை பிற மக்களிடம் எடுத்துச்சொல்ல வேண்டும். குறிப்பாக **ஷி**ர்க்கிலும், முன்னோர்களின் மூடப்பழக்க வழக்கங்களில் மூழ்கியிருக்கின்ற சகோதர முஸ்லிம்களிடம் எடுத்துரைக்க வேண்டும். இஸ்லாமிய அறிஞர்கள், அழைப்பாளர்களின் வாழ்வில் தூய்மை வேண்டும். நம்முடைய சொல், செயல் அனைத்தும் இறைவனுக்காக என்ற அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இந்த மகத்தான தியாகம் எப்போது நம் வாழ்வில் வருமோ, அப்போதுதான் உண்மையான ஹிஜ்ரத்தின் நோக்கம் உருவாகும். ஒவ்வொரு வருடமும் ஹிஜ்ரா வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் எழுச்சி மிகுந்த இஸ்லாமிய உணர்வு நம்மிடம் ஏற்படவில்லை என்பதுதான் வருத்தமான விஷயம். ஒன்றுபட்ட சமுதாயமாக வாழும் நிலை எப்போது ஏற்படுமோ அப்போதுதான் நபி(ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தின் உண்மையான நோக்கம் நிறைவுபெறும். நமது சமுதாயத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற பிளவுகள் தொடர்கதை என்றாகி விட்டது. இதனால் நம் எதிரிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே இறைவனுக்காக சமுதாய ஒற்றுமைக்கு நாம் தயாராக வேண்டும். இவ்வாண்டு சமுதாய ஒற்றுமையே ஹிஜ்ராவின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். வல்ல இறைவன் ஒற்றுமையைக் குறித்து அல்குர்ஆனில் அதிகமான வசனங்களைக் கூறுகின்றான். இறுதித்தூதர் அவர்களும் ஒற்றுமைக்காக ஏராளமான ஹதீஸ்களை கூறியுள்ளார்கள்.

ஒற்றுமையை வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனங்களை விளங்கிக் கொண்ட பிறகும் ஒற்றுமை நம்மிடம் ஏற்படாவிட்டால் நாம் குர்ஆன் வசனங்களை நிராகரிக்கும் நிலை ஏற்படும். இந்த இழிநிலையை விட்டும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. நபி(ஸல்) அவர்கள் மதினாவிற்கு வருவதற்கு முன்பு அங்கு வாழ்ந்த **'அவ்ஸ், கஸ்ரஜ்'** என்னும் இரு வகுப்பாளர்கள் எப்போதும் மோதிக் கொண்டேயிருப்பார்கள். அவர்களுக்கிடையில் நடந்து வரும் மோதல்கள் பல வருடங்கள் நீடிக்குமாம். இந்த அளவுக்கு ஒருவருக்கொருவர் பகைவர்களாக வாழ்ந்து வந்தார்கள். நபியவர்கள் மதினாவிற்கு வந்த பின்னர்

சத்திய மார்க்கத்தை போதித்தார்கள். அப்போதனை ஏற்று அந்த இருவகுப்பாரும் தூய இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். காலமெல்லாம் விரோதிகளாக வாழ்ந்தவர்களின் இதயங்கள் இஸ்லாத்தை ஏற்ற பிறகு சகோதரர்களாக, நேசர்களாக பாசமுடையவர்களாக ஆகி விட்டார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

அவர்களின் இதயங்களை இணைத்தது சாந்தி மார்க்கமாம் இஸ்லாம்தான். அதற்கான பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டவர்கள் நபி(ஸல்) அவர்கள்தான். இவை வல்ல அல்லாஹ்வின் அருளால் நிகழ்ந்தது. ஆனால் இன்று ஏகத்துவத்தின் பெயரால் இதயங்கள் இணைந்த பிறகு கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து விட்டார்களே என்று எண்ணும் போது மனம் மிகவும் வருத்தம் அடைகிறது. ஏகத்துவவாதிகள் இறைவனுக்குப் பயந்தவர்கள்; அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். ஆனால் பிரிய மாட்டார்கள். ஏனெனில் வல்ல அல்லாஹ் பிரிந்து விடவேண்டாம் என எச்சரிக்கை செய்கிறான். அல்லாஹ்வின் எச்சரிக்கையை உண்மையான அடியார்கள் ஒருபோதும் மீற மாட்டார்கள்.

**இதை அல்லாஹ் தெளிவுபடுத்துவதைப் பாருங்கள்:**

> **“நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக் கும் கீழ்படிந்து நடங்கள்; உங்களுக்குள் பிணக்கம் வேண்டாம். அவ்வாறு பிணக்கம் ஏற்பட்டு விட்டாலோ நீங்கள் தைரியத்தை யிழந்து விடுவீர்கள்! உங்கள் வளமை குன்றி விடும். துன்பங்களை சகித்துக் கொண்டு பொறுமையாக இருங்கள். அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்”.**

*அல்குர்ஆன் 8:46*

ஆகவே அன்பிற்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! நமக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை களைந்து அல்லாஹ்வுக்காக அவனின் உயர்வான மார்க்கத்திற்காக ஒன்றுபடுவோம். அல்லாஹ்வின் அருள் பெறுவோம். இதுதான் உண்மையான ஹிஜ்ராவின் சிந்தனையாகும். எல்லாம் வல்ல அல்லாஹ்வே! பல பிரிவுகளாக நாங்கள் பிரிந்து வாழ்கிறோம்! எங்களை ஒன்றிணைத்து வீரமிக்க சமுதாயமாக ஆக்குவாயாக! ஆமீன்.

2005 அந்நஜாத்